1790

உ

# சமயபுரம் மாரியம்மன் பதிகம்.

இஃது
இராமநாதபுரம் சிவகங்கை யென்னும்
உபய சமஸ்தான வித்வான்
வேம்பத்தூர் சிலேடைப்புலி
பிச்சுவையரவர்கள் குமாரரும்
...க் காலேஜ் தமிழ்ப் பண்டிதருமான
...கரையரவர்களால்
...யெற்றப்பெற்று,

Q25:38.21192
N29
180867

மதுரை
...ாசனி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.
1929.

உ

# சமயபுரம்

# மாரியம்மன் பதிகம்.

இஃது

இராமநாதபுரம் சிவகங்கை யென்னும்

உபய சமஸ்தான வித்வான்

வேம்பத்தூர் சிலேடைப்புலி

பிச்சுவையரவர்கள் குமாரரும்

மதுரைக் காலேஜ் தமிழ்ப் பண்டிதருமான

பி. பாஸ்கரையரவர்களால்

இயற்றப்பெற்று,

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1929

# சாற்றுக்கவி.

---

சீர்பெறு நிம்பைப் பதிவளர் வேதியச்
செழுந்தமிழ்ப் புலவருண் மணியாம்
பேர்பெறுஞ் சிலேடைப் புலியெனும் பெயர்கொள்
பிச்சுபா ரதிதவப் பயனாத்
தேர்பெறு குமரன் பாற்கரக் கவிஞன்
சீதள மாரிமென் றோட்கு
கார்பெறுந் தமிழிற் பதிகமொன் றணிந்தான்
நயந்தவள் மகிழ்தர மன்னோ.

மு. கோவிந்தசாமி ஐயர்.
செயின்ட்மேரி ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்.
மதுரை.

---

18086

சிவமயம்.



# சமயபுரம் மாரியம்மன் பதிகம்.

—

காப்பு.

சீதளகௌ மாரியெனுந் தேவிமே லோர்பதிகம்
பூதலத்தில் விற்பனர்கள் போற்றிடநான்—ஓதற்குத்
தந்தியுரித் துப்போர்த்த தாணுவினா லேபெற்ற
தந்திமுகத் தோன்றாள் சரண்.

## நூல்.

சீர்கொண்ட நவமணி பதித்தமகு டத்தொளி
சிறந்திடுஞ் சென்னி யழகும்
செயவிந்தை யமுதொடும் முன்வந்த திங்கணேர்
திருவா னனத்தி னழகும்
தார்கொண்ட புயவள்ளி கணவனுக் குப்பயசு
தந்துமகிழ் கொங்கை யழகும்
தருவெனத் திரள்கன்ன லங்குசத் தொடுபாசந்
தாங்கியொளிர் கையி னழகும்
வார்கொண்ட வனசமலர் நிகராகு மோவென்று
வளர்கின்ற பாத வழகும்
வழிவழி யுனைத்தியா னித்திடக் கருதினேன்
வந்தெனக் கருள்பு ரிகுவாய்
தேர்கொண்ட படைமன்ன னம்போஜ ராஜன்முன்
செங்கோல் புரிந்த நகராம்
சித்திதரு சமயபுரம் நத்தியுறு பத்தர்பணி
சீதளகௌ மாரி யுமையே. (1)

# சமயபுரம் மாரியம்மன் பதிகம்.

சோதிசுந் தரவல்லி கற்பூர வல்லியொளிர்
துய்யமா ணிக்க வல்லி
சுருதிபுகழ் மதியிரவி யெரிகொடிரி நயனிதிரி
புரைவாலை சூலி நீலி

நீதிபரி பாலிமகிழ் மோலிபை ரவிகாளி
நித்தியா நந்த வல்லி
நிரஞ்சனி துரந்தரி நிராமய நிரந்தரி
நிமலிநீ யென்று நாளும்

ஓதிவரு மடியர்பவ வினையாதி யாவையும்
ஓட்டியவ ருள்ள மென்னும்
உதயதா மரையினைக் கோயிலாக் குடிகொண்டங்
கோங்கிடுங் கருணை செய்வாய்

தேதிமழை தவறாது மாதமும் மாரிபெய்
சீர்த்திகொள் போஜ னகராஞ்
சித்திதரு சமயபுரம் நத்தியுறு பத்தர்பணி
சீதளகௌ மாரி யுமையே. (2)

முற்பிறப் பிற்செய்பா வத்தினால் வந்திடும்
மூலமந் தார காசம்
முடியுறு வியாதிமார் பாணிகா லாணியொடு
மூடுமே கப்ப டார்ச்சி

புற்புத மெனத்தேக முற்றிலும் பற்றிடப்
பொங்கியெழு தடை வா ளையும்
புறவிலாப் பக்கவரு பக்கவா தங்களும்
போற்றிரா சப்பி ளவையும்

சொற்பிறக் குங்கண்ட மாலையும் சோகையும்
துன்புசெய் கின்ற சுரமும்
சுரர்பரவு நின்றிருக் கோயிலைக் கண்டிடுந்
சொல்லாம லேப றக்கும்

சிற்பொருள் விளங்கிடும் அற்புத மிகுத்திடும்
சிற்சொரூ பாநந்தி யாம்
சித்திதரு சமயபுரம் நத்தியுறு பத்தர்பணி
சீதளகௌ மாரி யுமையே. (3)

முன்னோநா வலர்சொற்ற முத்தமிழ்க் கடலினடு
　　முன்வந்து மோன மயமாய்
முதுமுனிவர்கள் ஞானமரிய பொருளென வயங்கிடும்
　　முக்கண்ணி யான முதலே

அன்னைதந் தைநீ யல்லாது வேறெனக்
　　காருறவு சொல்க வம்மா
அனவரத முனதுபுகழ் பாடிவரு வார்க்கன்றி
　　யருள்புரிந் தாளு வாயோ

பொன்னைநன் மனையினைப் பூவினைக் கோவினைப்
　　புனையாடை தம்மை நச்சிப்
போதுபோக் கித்திரிந் துன்னடி மறந்தனன்
　　புலையனேன் றன்னை யாள்வாய்

தென்னைமா பலகதலி கன்னல்சூழ் பண்ணையார்
　　சீர்த்திகொள் போஜ னகராம்
இத்திரு சமயபுரம் நத்தியுறு பத்தர்பணி
　　சீதளதேவி மாரி யுமையே. (4)

அங்கமீ தினிலிருக் குங்குற்ற மறியாமல்
அங்கசன் என்ன வுன்னி
அறலைநிகர் குழல்மாதர் வலையகத் தகப்பட்
டவத்தைமிக வாரு மாந்தர்

தங்களை யடுத்தொருவன் மிக்கபசி யாயிம்..ன்
சாதமீ யென்று விள்ளச்
சண்டாள னேயிங்கு நில்லாது போவென்று
தள்ளியுஞ் சாடை யாக

எங்களுக் கன்னமே யில்லாது பட்டினி
யிருந்தா லளித்தி டேமா
என்றுதந் திரமாய் விரட்டிடும் பாவியில்
ஏகா திருக்க வேண்டும்

சிங்கவா கனமீது புங்கமாப் பவனிவரு
செல்வியே சீர்த்தி தருவாய்
சித்திதரு சமயபுரம் நத்தியுறு பத்தர்பணி
சீதளகௌ மாரி யுமையே. (5)

பண்டருஞ் செஞ்சொலான் வண்ணப்ர பந்தாதி
பாரகா வியங்க ளெல்லாம்
படபடென நெஞ்சுபுண் ணாகிடப் பாடியே
பார்த்திப னென்ன வாழும்

எண்டருஞ் செல்வம் படைத்தவ ரிடத்தினி
லேகிநா னற்றம் நோக்கி
ஏனுமெனு மிச்சம் பழத்தைக் கவிசொலி
யீந்திடக் கையில் வாங்கித்

தண்டமிழ்ப் புலவரே கனியெங்கு வாங்கினீர்
சமயமிலே சென்று வாரும்
சற்றுநீர் நின்றிடிற் போராகு மேயென்று
சாற்றிடும் மூடர் தம்பால்.

செண்டினைக் கைக்கொண்ட தேவியே நானினிச்
செல்லா திருக்க வருள்வாய்
சித்திதரு சமயபுரம் நத்தியுறு பத்தர்பணி
சீதளகௌ மாரி யுமையே. (6)

நாடெலாம் பலகோடி தெய்வங்கள் மூர்க்கமாய்
நான்குகை வேல்வா ளுடன்
நரர்கண்மிக வஞ்சிடக் கோயிலாக் குடிகொண்டு
நாலாடு கோழி முட்டை

மாடெலாம் பலிவாங்கிச் சும்மா புசித்திடும்
வந்தடைந் தார்க்கொ ருபயன்
வழங்காது சிலநாள் மறைந்திடும் கொம்பனும்
மாடனுந் தெய்வ மாமோ

நாடெலா மரசுபுரி வேதாளி துர்க்கைமா
காளியே சீர்த்தி வேட்டுக்
கவிதையாற் பதிகமொன் றுன்மீது பாடினேன்
கனதைநீ தந்தருளு வாய்

சேடெலாந் திகழ்கூட மாடமே யோங்கிடும்
செல்வஞ் செழித்த வூராம்
சித்திதரு சமயபுரம் நத்தியுறு பத்தர்பணி
சீதளகௌ மாரி யுமையே. (7)

(8086)

## சமயபுரம் மாரியம்மன் பதிகம்.

நந்தாத செல்வமுந் தோலாத கல்வியும்
நல்லறஞ் செய்யும் மகனும்
நமன்றனைக் கஞ்சாத திண்மையு மாயுளும்
நரஸ்துதிசொ லாத நாவும்

கந்தா வனந்தா தனந்தா வெனச்சொலிக்
கைவிரித் தேந்தி நிற்குங்
கண்ணிய மிலார்தமைக் கண்டுநா னிலையென்று
கழறாத நல்லெண்ண முடம்

தந்தாத னத்ததன திந்தா திமித்தவெனச்
சீர்த்தில்லை யீச னோடு
தாளத்தை விட்டிடா தொத்தே நடித்திடுஞ்
சங்கரி முந்தி யீவாய்

செந்தா திவர்ந்திடும் மந்தார முல்லைமாச்
சேகரச் சோலை சூழும்
சித்திதரு சமயபுரம் நத்தியுறு பத்தர்பணி
சீதளகௌ மாரி யுமையே. (8)

பொய்சொலிக் கொஞ்சுவேன் மெய்சொலற் கஞ்சுவேன்
பூசையிற் றுஞ்சி வீழ்வேன்
புராணாதி வேதங்க ளோதிடப் பிந்துவேன்
புண்ணியஞ் செய்து மறியேன்

மொய்குழற் றெரிவைய ரின்பத்தின் மூழ்குவேன்
மூன்றுபடி நாளுமுண்ணு வேன்
முதியவர் படித்தவர்க ளின்பவுரை கேட்டிடேன்
மோனநூல் கற்க மாட்டேன்

நொய்யளவி லன்னமும் யாசகர்க் கீந்திடேன்
நொடியினுக் கோர்கொலைசெய் வேன்
நோயினர் தமைக்கண்டு சந்தோடங் கொள்ளுவேன்
நுவலரிய சண்டாள னான்

செய்வித மறிந்திலேன் சீதரன் சோதரி
சேயனுக் கருள் புரிகுவாய்
சித்திதரு சமயபுரம் நத்தியுறு பத்தர்பணி
சீதளகெள மாரி யுமையே. (9)

வேந்தாதி வேந்தர்பணி ராஜராஜேஸ்வரி
விமலைகலியாணி நீலி
மேலான முக்கோண ஷட்கோண நவகோண
வில்வவிந் தத்தி னிதழா
லேந்தாகு நாற்பத்து முக்கோண மீமிசை
யேய்ந்திடும் தேவி நிம்பை
இசைபெற்ற கவிராஜ பண்டிதற் குதவிடும்
எங்கள்குல மாதங்கி யே
சாந்தாதி யான்மேனி கொண்டிடு சடாதரி
சம்புபா கத்து வாமி
சற்குண தயாநிதி சற்சன புராதனி
சகலகுண சம்பன்னி யே
சேந்தாதி மூவர்துதி சுந்தரிநல் லந்தரி
சிந்தித்த வைகள் தருவாய்
சித்திதரு சமயபுரம் நத்தியுறு பத்தர்பணி
சீதளகௌ மாரி யுமையே. (10)

சுபம்.

## வாழ்த்து.

இந்நூல் வாழி யிதையெடுத் துப்படிப்பார்
சந்ததமும் வாழி சமயபுரஞ்—சொந்தமெனக்
கொண்டபுகழ் மாரியம்மன் கோயிலென்றும் வாழி
மண்டலத்தில் வாழி மகிழ்ந்து. (மறை

சுபம்.

மீனலோசனி
பிரஸ்,
மதுரை.
1929.